யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு                விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 208 ஆங்கீரச ஆனி 08 ( 22 . 06 . 1992 ) திங்கள்


## காற்றினால் எறியப்பட்டு கிணற்றில் மூழ்கி பெண் பலி

சுழல் காற்றினால் கிணற்றினுள் வீசி எறியப்பட்டு நீரில் மூழ்கி பெண் ஒருவர் மரணமான சம்பவம் நேற்று முன்தினம் காலை கோம்பாய் தெற்கில் இடம்பெற்றுள்ளது. இப்பெண் தோட்ட வெளியில் இருந்து விறகு எடுத்துக் கொண்டு வரும்போது திடீரெனப் பெரும் சுழல் காற்று வீசவே தோட்டக் கிணற்றினுள் தூக்கி எறியப்பட்டு மரணமானார். தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர்ந்து கோம்பாய் தெற்கில் உள்ள சென். மேரிஸ் அகதி முகாமில் தங்கியிருந்த திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் (48) என்பவரே இப்படி மரணமானார். 07

# தெரிவுக்குழு தொடர்ந்து கூடுவதில் மேலும் பயன் இல்லை என தெரிவிப்பு

## தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருத்து

தமிழ் மக்களின் கோரிக்கையின் அடிப்படையான வடக்கு கிழக்கு இணைப்பை தெரிவுக்குழு நிராகரித்துள்ள நிலையில் தொடர்ந்து தெரிவுக்குழு கூடுவதிலும் அதில் தமிழ்கட்சிகள் நம்பிக்கை வைப்பதும் தேவையற்ற ஒன்றாகவே தற்போது கொழும்பு தமிழ் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுவதாக பி. பி, ஸி தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஏற்பதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதைத்தவிர விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாத தெரிவுக்குழு கூட்டத்தில் எந்தப்பயனும் இல்லை என ஓர் தமிழ் அரசியல்வாதி குறிப்பிட்டதாக பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இப்போது விவாதத்திற்குள்ளாகியுள்ள வடக்கு, கிழக்கின் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது இதுவே இன்றைய அப்பட்டமான அரசியல் உண்மை எனவும் அந்த அரசியல்வாதி குறிப்பிட்டாராம்.

## தெரிவுக் குழுவின் ஏபெக்ஸ் திட்டம் பிரதான கட்சிகள் ஆதரவு

தெரிவுக்குழுவினால் முன் வைக்கப்பட்டுள்ள மாகாண கவுன்சில்கள் திட்டத்திற்கு ஐ. தே. கவும், சுதந்திரக் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தெரிவுக்குழுவின் புதிய திட்டத்தில் இரு சட்டசபை போன்ற அமைப்பு வடக்கிலும் கிழக்கிலும் அமையும். இவற்றை இணைக்கும் ஓர் பாலமாக மேன்நிலை (Apex) குழு இருக்கும். இந்த மேன்நிலை குழுவின் அதிகாரம் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

இதனிடையே தெரிவுக்குழு

— 4 ஆம் பக்கம் பார்க்க

★ தெரிவுக்குழு 29ஆம் திகதி கூடுகிறது

## ஆலோசனைகள் ஏற்கப்பட்டால் புலிகள் பேச்சுக்கு வரலாம்

### -- தொண்டமான்

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 7 தமிழ் அரசியற் கட்சிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று நேற்றுக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அவை ஐ. தே. க, சுதந்திரக் கட்சி போன்ற பிரதான கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் விடுதலைப்புலிகள் வட- கிழக்குப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகக் கிராமிய தொழிற்றுறை, சுற்றுலாத்துறை அமைச்சர் . எஸ். தொண்டமான் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளதாகவும் இச் செய்தி மேலும் தெரிவித்தது.

★ புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கணக்கு

## 500 மெற்றிக் தொன் சீனி குடாநாட்டுக்கு போதுமாம்

யாழ் மாவட்டத்துக்கு 500 மெற்றிக் தொன் சீனி போதும் என் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் இறிஞி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆனால் 1780 மெ. தொன் சீனியை அரசு வடக்கே அனுப்ப விக அனுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு மாதத்துக்கு யாழ்க் குடாநாட்டுக்கு 2000 மெற்றிக் தொன் சீனி தேவைப்படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்தது முதல் யாழ், மாவட்டத்திற்கு குறைவாகவே சீனி அனுப்பி வைக்கப்பட்டு வருகிறதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## எண்ணாயிரம் மக்கள் தீவகத்தில் சிக்கியுள்ளனர்

தீவுப்பகுதியில் 90 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த வருடம் அக்டோபர் மாதம் வரையில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் ஒரு இலட்சத்து அறுநூற்றி தொண்ணூற்றி ஏழு பேரில் எண்ணாயிரத்து ஏழுபத்தி மூன்று பேர் இராணுவத்தினரிடம் சிக்கித்தவிக்கின்றனர்.

தற்போது படையினரிடம் அகப்பட்டுள்ளனர் எண்ணிக்கை பின்வருமாறு:-

ஊர்காவற்றுறையில் 740 0 மக்களில் 466 பேரும், காரைநகரில் உள்ள 45000 மக்களில் 757 பேரும். புங்குடு

... 04ஆம் பக்கம் பார்க்க

## இளவாலைப்பகுதி வழமைக்கு திரும்புகிறது

இளவாலைப்பகுதி வழமைக்கு திரும்பிக்கொண்டிருப்பதைக் காண முடிகிறது மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி வருகின்றனர்

இளவாலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நேற்று ஞாயிறு காலைப்பூசை நடைபெற்றது

இளவாலை புனித யுவானியார் தேவாலய திருநாள் கொடியேற்றம் நேற்று இடம் பெற்றது

இதேநேரம் இளவாலைச் சந்திக்கு அப்பால் மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது

சிறுவிளான், அளவெட்டிபகுதி மக்களும் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளனர்

22 07

## பிரமுகரின் அலுவல் காரணமாக விமானம் தாமதிக்கப்பட்டது

அண்மையில் கொழும்பிலிருந்து அவுஸ்திரேலியா - சிட்னிக்கு சென்ற விமானம் ஒன்று 9 மணி நேரம் தாமதமாகவே சென்றடைந்துள்ளது.

குறித்த விமானத்தில் பயணம் செய்யவிருந்த முதல் வகுப்பு முக்கிய பிரமுகர் ஒருவர் கொழும்பில் நடைபெற்ற மரணச் சடங்கொன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்றமையினாலேயே விமானம் தாமதமாகப் புறப்பட்டுச் சென்றடைந்தது.

இத்தகவலை அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் ஸ்ரீ லங்கா பத்திரிகை தெரிவித்துள்ளது. (22)

## பூநகரியில் சிக்கிய லொறிகளை இனிமேல் மீட்க முடியாது

பூநகரிப் பகுதியில் படையினரிடம் சிக்கியுள்ள லொறிகளை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பூநகரியில் கடந்த ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது அகப்பட்ட லொறிகளை விடுவிக்க கட்டுப்படைத் தலைமையகம் பல் வேறு நொண்டிச் சாட்டுகளை கூறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்த லொறிகளை எப்படி எடுத்துவருவது யார் எடுத்து வருவது போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் அவ்வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது

அரசாங்க அதிபர் இவற்றை மீட்க பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 47

## வீடுபார்க்கச் சென்றவர்கள் அலம்பிலில் அகப்பட்டனர்

முல்லைத்தீவு - அலம்பில் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வீடு பார்க்கச் சென்ற பலர் படையினரிடம் அகப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்

இவர்களை விடுவிப்பது குறித்து தொண்டர் நிறுவனம் ஒன்றின் மூலம் உறவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

## பிரான்ஸில் போதைவஸ்து 10 இலங்கைத்தமிழர் கைது

பிரான்ஸில் போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டதற்கு இலங்கைத்தமிழர்கள் பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப் பட்டனர்

இவர்கள் ஒரு கிராம் ஹிரோயினை 1000 பிராங்குக்கு விற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது 22

## இஸ்ரேல், லிபியாவில் ஆயுத களஞ்சியத்தில் வெடிவிபத்து

நேற்றுக்காலை இஸ்ரேலிலும் லிபியாவிலும் ஆயுதக் கிடங்குகளில் ஏற்பட்ட வெடி விபத்துகளினால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன

நேற்றுக்காலை மத்திய இஸ்ரேலில் ஆயுத தொழிற்சாலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

# ராஜீவ் கொலை வழக்கு ஜூலை 1 வரை ஒத்திவைப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கு ஜூலை முதலாம் திகதி வரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை செங்கல் பட்டில் நீதிபதி சௌந்தர பாண்டியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றம் சாட்டப்பட்டுள்ள 26 பேருக்கும் குற்றப் பத்திரிகைப் பிரதிகள் மற்றும் சாட்சியங்களின் பெயர்ப் பட்டியல் என்பன வழங்கப் பட்டன.

குற்றப் பத்திரிகைகளின் பிரதிகள் ஆங்கிலத்தில் இருப்பதனால் அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத் தருமாறு நீதிபதியிடம் முறையிடப் பட்ட போது அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ★ இராணுவ நடவடிக்கையின்போது பலியானவர்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு இல்லை

கிழக்கு மாகாணத்தில் உள்ள வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடமைபுரிந்த ஊழியர்களில் 36பேர் 83 ஆம் ஆண்டுதொடக்கம் 92 ஆம் ஆண்டுவரையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் பலியாகியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு இன்று வரையில் எவ்வித கொடுப்பனவுகளோ, சம்பளமோ நஷ்ட ஈடோ வழங்கப்படவில்லையெனத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக வாழைச் சேனை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு அம்பாறை தமிழர் மகாசங்கம் முறையிட்டுள்ளது. (07)

## சர்வதேச கூட்டுறவு தினப் போட்டிகள்

சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு வலிகாமம் மேற்கு கூட்டுறவாளர் கோட்டம் பாடசாலை மாணவரிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, வினாடி வினாப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையுள்ள மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும் ஆண்டு 6 முதல் ஆண்டு 10 வரையுள்ள மாணவர்கள் மத்திய பிரிவிலும் ஆண்டு 11 முதல் ஆண்டு 13 வரையுள்ள மாணவர்கள் மேற்பிரிவிலும் கலந்துகொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் போட்டி சம்பந்தமான விதிகளை போட்டிக் குழுவினரிடம் பெற்று பாடசாலை அதிபரூடாக 'செயலாளர் வலிகாமம் மேற்கு கூட்டுறவாளர் கோட்டம், மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்' என்ற முகவரிக்கு 29-6-92 க்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (18)

## இந்திய ஜனாதிபதி தேர்தல்

### பேராசிரியர் சுவெல் தேசிய முன்னணி வேட்பாளர்

இந்திய ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் லோகசபா சபாநாயகர் பேராசிரியர் ஜீ.ஜி சுவெல்லை கூட்டு எதிர்க்கட்சி வேட்பாளராக நிறுத்துவது என்ற ஜனதா தளக் கட்சியின் ஆலோசனையை தேசிய முன்னணி ஏற்றுள்ளது.

முறைப் படியாக இதை அறிக்கும் முன்பு தமது இடதுசாரி சகாக்களை தேசிய முன்னணி கலந்தாலோசிக்கவுள்ளது. பாரதிய ஜனதாக் கட்சியும் இதை ஆலோசிக்கவுள்ளது. பேராசிரியர் சுவெல் எதிர்க்கட்சியினரின் கருத்தொருமித்த வேட்பாளராக வருவது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் எடுக்கும் நிலையிலேயே தங்கியுள்ளது.

பேராசிரியர் சுவெல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவர். கணிசமான காலம் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவரானபடியால் எதிர்க்கட்சி வேட்பாளராகும் வாய்ப்பு இவருக்கு உண்டென கூறப்படுகிறது.

### ராம் ஜெத்மலானி இராஜினாமா

ஜனதா தளக்கட்சி பேராசிரியர் ஜீ.ஜீ சுவெல்லை ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளராகத் தெரிவு செய்ததை ஆட்சேபித்து அக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் பிரபல வழக்கறிஞருமான ராம்ஜெத்மலானி கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

### சங்கர் தயாள் சர்மாசார்பில் மூன்றாவது வேட்பு மனு

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா சார்பாக மூன்றாவது வேட்பு மனுவொன்றை முன்னாள் பிரதமர் சந்திரசேகர் முன்னாள் ஜனதா தள உறுப்பினர் அஜித்சிங் மற்றும் முன்னாள் தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர் பி.உபேந்திரா ஆகியோர் நேற்று தாக்கல் செய்தனர்.

நாடாளுமன்ற அளவில் அறுதிப் பெரும்பான்மை வாக்குப் பலத்தைக் கொண்டிராத காங்கிரஸ் கட்சிக்கு சில உதிரிக் கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என்பதையே இந்த வேட்பு மனுத்தாக்கல் சுட்டிக்காட்டுகிறது.

# இ.தொ.கா., தமிழ்க்கட்சிகள் யோசனை பற்றி விவாதம்

பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் 29 ஆம் திகதி கூடவுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளிடம் கையளிக்கப்பட்ட நான்குபக்க அறிக்கையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினாலும், ஈழத் தமிழ்க் கட்சிகளினாலும் கையளிக்கப்பட்ட அறிக்கையும் மங்கள முனசிங்க எம். பி. தலைமையிலான இக் குழு முன் விவாதத்திற்கு இவ் வேளை எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஐ.தே.க., சு.க.இணைப்புக்கு முயற்சி எனத் தகவல்

ஐக்கியதேசியக் கட்சியோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணையவேண்டுமென்று சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு முக்கிய பிரிவினர் தமது கட்சிக்குள் ஆதரவு தேடி பிரசாரம் செய்து வருவதாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இப் பிரிவினர் பொது வேலைத்திட்டம் வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர் என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் விபத்து

நேற்று மாலை நாவற்குழிச் சந்தியில் அதி வேகமாக வந்து கொண்டிருந்த சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நாவற்குழியைச் சேர்ந்த நவரட்னம் இரகுநாதன்(15) என்பவரே வாகன விபத்திற்குள்ளாகி படுகாயமடைந்தவராவார்

நேற்று இரவு வரையில் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டார். (07)

## பணிப்பாளர் அலுவலகம்

வவுனியா மாவட்டத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் அலுவலகம் 8 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கால்நடை அபிவிருத்தி விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மிருகவைத்தியருக்கு ஒரு மோட்டார் சைக்கிளும் வழங்கப்பட்டுள்ளது.

## புதிய நியமனம்

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளராக க. சுந்தரேசன் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இப் பதவியிலிருந்த எ. ஸ்ரீ சுந்தரராஜா கொழும்பிலுள்ள தலைமைக்காரியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

சுந்தரேசன் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கமத்தொழில் காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றிவருகின்றார். 37

## மஹோற்சவம்

இருபாலை கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

இரதோற்சவம் 13 ஆம்திகதி திங்கட் கிழமையும் தீர்த்தோற்சவம் 14ஆம் திகதிசெவ்வாய்க் கிழமையும் நடைபெறவுள்ளன (18)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது, 13-07 92 (திங்கட்கிழமை) தேர்த்திருவிழாவும். 14-07-92 (செவ்வாய்க்கிழமை) தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## ★ மன்னார்த் தீவில் சிங்கள முஸ்லிம் குடும்பங்கள் இராணுவத்தினால் குடியேற்றம்

மன்னார்த்தீவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சிங்களக்குடும்பங்களும்,முஸ்லிம் குடும்பங்களும் குடியேற்றப்பட்டுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிலாவத்துறை, அரிப்பு,முள்ளிக்குளம், பூக்குளம் பகுதிகளில் இராணுவத்தினரின் உதவியுடனேயே சிங்களக்குடியேற்றங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

வெளியேறிய முஸ்லிம் குடும்பங்களும் எருக்கலம்பிட்டி, தாராபுரம் பகுதிகளில் வந்து குடியிருந்து வசித்து வருவதாகவும் முஸ்லிம்மக்கள் நடமாட்டமும் மன்னார்த்தீவில் இருப்பதாகவும்அங்கிருந்து வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

## சி. ஐ. டி. எனக் கூறி ரூ.20 ஆயிரம் கொள்ளை

சி. ஐ. டி.யினர் எனக்கூறி கொழும்பில் உயரதிகாரிகளிடம் 20 ஆயிரம் ரூபா பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து அலுவலக விடயம் தொடர்பாக வந்த அதிகாரிகளிடமே இக் கைவரிசை காட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் கோஷ்டி ஒன்றே இரவு வேளை இச் சம்பவத்தில் ஈடுபட்டதாம்.

## வழக்குத் தாக்கல் செய்ய உதவுவதெனத் தீர்மானம்

மூன்று வருடங்களுக்கு மேலாகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மனித உரிமைகள் செயலணிக் குழு உதவி புரியவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போட்டிகள் நடத்த ஏற்பாடு

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 21ஆவதுஆண்டுவிழாவைமுன்னிட்டு கவிதைபோட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என்பனவற்றை நடத்துவதற்கு மேற்படிநிலையத்தினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் இந் நிலையத்தில் இயங்கும் பாலர் பாடசாலையும் மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 47

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

ஆரம்ப சுகாதார கவனிப்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித்தகைமை, சுகாதாரப் போதனாசிரியர் அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் 02-07-92க்கு முன் விண்ணப்பிக்கவும். 04-07-92 காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73. கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
19-06-92

06047

நல்லூர் ... யாழ்ப்பாணம்

பூநகரி-ஜெயபுரம் பகுதிகளில்

# குழாய்க்கிணறு அமைக்கும் பரீட்சார்த்த முயற்சி வெற்றி

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் பூநகரி-ஜெயபுரம் பகுதியில் மேற்கொண்ட குழாய்க்கிணறு அமைக்கும் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றி கண்டுள்ளது.

மேற்படி கழகம் இப் பகுதியின் நன்னீர் பற்றாக்குறையினால் அவதியுற்ற 600 குடும்பங்களின் நன்னீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு ஒக்ஸ்பாம் நிறுவனத்திடம் கோரியதற்கமைய இந் நிறுவனம் இதற்கான உதவிகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றவுள்ளது.

அண்மையில் நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர்கள் இப் பகுதிக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தினருடன் வந்து நன்னீரோட்ட வரைபடத்தின் மூலம் 10 கிணறுகளை தெரிவு செய்து கொடுத்தனர். இதில் மூன்று கிணறுகளில் குழாய்கள் ஆழப் புகுத்தப்பட்டு நன்னீர் கிடைத்துள்ளது.

இப் பரீட்சார்த்த முயற்சியின் வெற்றியினை அடுத்து மேலும் 37 கிணறுகளில் குழாய்கள் மூலம் நன்னீர் பெறவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 30 அடி ஆழமான கிணறுகளில் மேலும் 30 அடி ஆழத்திற்கு குழாய்கள் புகுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு குழாய்கள் புகுத்தப்பட்ட கிணறுகளில் இருந்து 10 குடும்பங்கள் பயனடையவுள்ளன. (31)

பல்லவராயன் கட்டு

# மாதிரிக் கிராமத்தில் வாழைச் செய்கைத்திட்டம்

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினால் பூநகரி பல்லவராயன் கட்டு மாதிரிக் கிராமத்தில் வாழைச் செய்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இக் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 40 குடும்பங்கள் இதனால் பயன் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு குடும்பத்திற்கு ¼ ஏக்கர் வீதம் 10 ஏக்கரில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்திற்கு ஆரம்ப முதலீடாக ஒரு குடும்பத்திற்கு 10,350/- ரூபாவினை வட்டியில்லாக் கடனாக வழங்கித் திட்டம் ஆரம்பித்து 10 ஆவது மாதம் தொடக்கம் பகுதி பகுதியாக மூன்று தவணைகளில் பயனாளிகளால் மீளச் செலுத்தப்படும். இதற்கிடையில் ஊடுபயிர் செய்கையில் பயனாளிகள் முதல் ஆறு மாதத்திற்கும் மேற்கொண்டு பயன்பெற திட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒக்ஸ்பாம் நிறுவனம் இந் நிறுவனத்திற்கு 4 லட்சத்து பதினையாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. மாதிரித்திட்டக் குழாய்க் கிணறுகளிலிருந்து இயந்திரம் மூலம் நீர் பெறப்பட்டு இவ் வாழைச் செய்கைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (31)

## விபுலானந்தர் விழா

இடைக்குறிச்சி ஸ்ரீ வள்ளி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் விழாவினைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி சங்கத் தலைவியின் தலைமையில் நடைபெறவிருக்கும், இவ் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக தொழிலதிபர் க. கனகராசா ஜே.பி. சைவப் புலவர் க.சி. குலரத்தினம். தென்மராட்சி பிரதேசச் செயலர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். 25

## திருடர் தொல்லை

கொழும்பு புறக்கோட்டை ரயில்வே நிலையத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கு வருவதற்காக இந்த ரயில்வே நிலையத்தில் ரயிலை காத்து நிற்கும் தமிழ் பயணிகளிடம் இருந்து பணம் மற்றும் பொருள்களை அபகரிப்பதில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

திருடர்களின் நடமாட்டம் அதிகரித்ததை தொடர்ந்து பயணிகள் மிகவும் விழிப்பாக நடக்கும்படி மேற்படி ரயில்வே அலுவலகம் தமிழ், சிங்கள மொழிகளில் நாளாந்தம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (47)

## அனர்த்தம்

பூநகரி - ஜெயபுரம் போன்ற பகுதிகளில் கடுமையான காற்றினால் பல மரங்கள் வீழ்ந்துள்ளன பூநகரியில் இருந்து இடம் பெயர்ந்த ஜெயபுரம் பாடசாலையில் 3 ஆம் ஆண்டு, 2 ஆம் ஆண்டு வகுப்புகளில் கல்வி பயிலும் இரண்டு மாணவர்கள் மீது அண்மையில் பாடசாலையில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்த வேளை மரம் காற்றினால் முறிந்து வீழ்ந்தமையினால் ஒருவர் சிறு காயமுற்றதும் மற்றும் ஒருவர் படுகாயமுற்றதும் குறிப்பிடத்தக்கது.

பல வீதிகளில் பாலை மரங்கள் காற்றினால் முறிந்து வீழ்ந்ததினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (31)

## பனைமரம் வீழ்ந்து மூன்று பிள்ளைகளின் தாய் மரணம்

காற்றினால் வேரோடு சாய்ந்த பனைமரம் ஒன்று வீழ்ந்து மூன்று ஆண்பிள்ளைகளின் தாயான இளம்பெண் மணி ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி தெய்வேந்திரம் (45 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

சம்பவதினம் வயலில் புல்லு வெட்டிக்கொண்டிருக்கும் போது வயல் மேட்டில் நின்ற பனைமரங்களில் ஒன்று வேரோடு சரிந்து இவருக்கு மேல் வீழ்ந்ததால் இவர் படுகாயமுற்றுச் சிறிது நேரத்தில் மரணமானார்.

அன்று இரவு நடைபெறவிருந்த அராலி வடக்கு மயிலிபற்புலம் கந்தசுவாமியார் கோவில் பூங்காவனத் திருவிழா இத் திடீர் மரணத்தால் உடனடியாக நிறுத்தப்பட்டது. (18)

## பெரும்போக காப்புறுதி

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் பெரும்போக நெற்பயிர்க் காப்புறுதித்திட்டத்தினை வழமை போல இவ்வாண்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை தலைமைக்காரியாலயத்துடன் தொடர்புகொண்டு யாழ் மாவட்ட கமத்தொழில் காப்புறுதிச்சபை உதவிப் பணிப்பாளர் செய்து வருகின்றார் 37

## வர்த்தக கருத்தரங்கு

மட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி உயர்தர வர்த்தக மாணவர் மன்றம் நடத்தும் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது 18

## மாவீரர் ஐவரின் நினைவாக கரபந்தாட்டப் போட்டி

மாவீரர்கள் 2 ஆம் லெப்- சங்கிலி, வீரவேங்கை சுகந்தன், கப்டன்-ஜெகன். வீரவேங்கை- அருண் வீரவேங்கை சீனு ஆகிய ஐவரின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு 6692 ஆம் திகதி திருமலை இடம் பெயர்ந்த மக்களால் அரியாலை லெப்- செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தின் விளையாட்டு மைதானத்தில் கரபந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

இப் போட்டியில் தும்பளை. மணாளன், தயான், பூபதி- செம்பியன் பற்று டேவிட், மட்டுவில் பொன்னம்மான், பளை, அரியாலை செல்லக்கிளி அம்மான் ஆகிய வீடமைப்புத் திட்டங்களில் உள்ள குழுக்களான சங்கிலி, சுகந்தன், மணாளன், ஜெகன் பளை ஆகியவை மோதின.

இப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தும்பளை மணாளன் அணியை எதிர்த்து செம்பியன்பற்று சுகந்தன் அணி மோதி செம்பியன்பற்று-சுகந்தன் அணியே சம்பியனாக வெற்றியீட்டியது. (16

# முடிவெடுப்பதில் முதிர்ச்சியற்ற முதல்வர் ஜெயலலிதா

கடந்த இரண்டு வாரகாலத்துக்குள் தமிழகத்திலுள்ள விவசாய நீரிறைக்கும் இயந்திரங்களுக்கான மின்பாவனைக்கு கட்டணம் வசூலிக்கப் போவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதிலே வேடிக்கை என்னவென்றால் அ.இ.அ.தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என்றே வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க) எனப் பல எதிர்க்கட்சிகளும் முப்பது லட்சம் விவசாயிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் போராட்டங்களும் நடந்தன. அவற்றில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

எதிர்ப்புகளின் காரணமாக மின் கட்டண வசூலிப்பு ஆலோசனையை இரத்துச் செய்வதாக முதல்வர் அறிவித்தார் கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் இருந்த பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட சகலரையும் விடுதலை செய்யும் படி டெல்லியிலிருந்து திரும்பியதும் முதல்வர் நேற்று உத்தரவிட்டார்.

தமிழக முதல்வர் மின்கட்டண அறிவிப்பை இரத்துச் செய்தது மக்கள் அபிப்பிராயத்துக்கு மதிப்பளிப்பதாக கூறப்படலாம். ஆனால் உண்மையில் இவை முதல்வரது நிர்வாக முதிர்ச்சியின்மையையும் முடிவெடுக்கும் திறனின்மையையும் தெளிவாகக்காட்டுகிறது.

சிறந்த முறையில் தீர்மானம் எடுப்பவர் எவரும் சம்பந்தப்பட்ட பிரச்சினையை சகல கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து சகல அம்சங்களையும் நிதானமாக சிந்தித்தே முடிவெடுக்க வேண்டும்.

"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவர் வாக்குக்கமையவே தீர்மானம் எடுத்திருத்தல் வேண்டும் ஜெயலலிதாவிடம் இந்த ஆற்றல் இல்லையென்பதை நிரூபிக்க இந்த நிகழ்ச்சி போதுமானது. இப்படிப் பல விடயங்கள் கடந்த ஒரு வருட ஆட்சியில் நடந்துள்ளன.

## எஸ். ஜி. எம்.

இவரது ஆட்சியைப் பற்றி பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் "ஆட்சி செய்வதற்கே தகுதியில்லாதவர் ஜெயலலிதா ஒரு நடிகையாகவே காலம் கழித்தவர். ஒருபோதும் அரசியல்வாதியாக இருந்ததே கிடையாது. அரசுக்கும், நிர்வாகத்திற்கும் என்ன வித்தியாசம் என்றே அவருக்குத் தெரியாது. அ.இ.அ.தி.மு.க. பிழைக்கவேண்டுமானால் புதிய தலைவரை அது தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்" என்கிறார்.

"சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் எதிர்க்கட்சியின் குரல் அமுக்கப்படுகின்றது ஜெயலலிதாவுக்கு அசௌகரியமான கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன" என்கிறார் தி.மு.க. செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா.

"தன் எதிரிகள் பற்றி அவதூறு பரப்ப ஜெயலலிதா பேரவையைப் பயன்படுத்துகிறார், குற்றஞ்சுமத்தப்பட்டவர் பதில்பேச முடியாதபடி சபாநாயகர் தடுத்துவிடுகிறார். எம்.எல்.ஏக்கள் என்ற முறையில் எங்கள் கடமையை நாங்கள் எப்படிச் செய்வது?" என்கிறார் சட்டப்பேரவை உறுப்பினரும் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சருமான திருநாவுக்கரசு.

விலைவாசி உயர்வினால் ஜெயலலிதா அரசு ஆட்டங்காணும் எனக் கருதும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் பெரும்பான்மை ஆசனங்களுடன் தம்மைப் பதவியில் அமர்த்திய பெண்களின் ஆதரவை ஜெயலலிதா இழந்து வருகிறார் என்று கூறுகிறார்.

இதற்கிடையில் அரசு நிறுவனமான டான்சிக்குச் சொந்தமான இடத்தைத் தமது ஜெயா பப்ளிக்கேசன்ஸுக்கு ஒரு கோடி என்பது லட்சத்துக்கு வாங்கியது இதயம் பேசுகிறது வார இதழின் அச்சகத்தைப் பன்னிரண்டு லட்சத்து அறுபதினாயிரத்துக்கு வாங்கியது, ஹைதராபாத்திலுள்ள 18 ஏக்கர் பண்ணையை அபிவிருத்தி செய்வது போன்ற குற்றச்சாட்டுகள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக எழுப்பப்படுகின்றன.

இதற்கு மேலாக குன்றூரிலுள்ள சுமார் நாற்பத்தொரு கோடி ரூபா பெறுமதியான "கிரேக்மோர் எஸ்டேட்" கொள்வனவு பேரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதான செய்திகளும் வெளிவந்துள்ளன.

இவையெல்லாம் ஜெயலலிதா ஓர் "அமெச்சூர்." அரசியல்வாதியென்பதையும், அரசாட்சி மரபுகளையும், பாரம்பரியங்களையும் அறியாதவர் அல்லது மதிக்காதவர் என்பதையும் முடிவெடுப்பதில் முதிர்ச்சியற்றவர் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

# முல்லைத்தீவு முதல் மணலாறு வரையிலான கடற்கரையோரம் ராணுவ ஆக்கிரமிப்பில்

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் இன்று வரையில் முல்லைத்தீவு மாவட்டம் தொடக்கம் மணலாறு மாவட்ட கடற்கரையோரப் பகுதி வரையிலான 16 மைல் பிரதேசம் சிங்கள இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது.

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல், சின்னத்தீவான் கட்டு, முல்லைத்தீவு, சிலாவத்தை, 5 ஆம் கட்டை அலம்பில், செம்மலை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய் முகத்துவாரம், மண்கிண்டிமலை ஆகிய பிரதேசங்கள் இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன் 16 மைல் பிரதேசம் முழுவதும் பல இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாண்டு காலத்தில் இப்பகுதியில் இருந்த தமிழ் விவசாய, மீனவக் குடும்பங்கள் முற்று முழுதாக சொந்த இடங்களை விட்டு வெளியேறி புதுக்குடியிருப்பு, முள்ளியவளை போன்ற இடங்களில் தங்கியிருக்கின்றனர்.

85 ஆம் ஆண்டிலிருந்து 87 ஆம் ஆண்டு வரையில் முல்லைத்தீவிலும் முகத்துவாரத்திலும் மட்டும் இராணுவ முகாம்கள் இருந்துள்ளன.

தற்போதைய நிலையில் பல முகாம்கள் அமைந்துள்ளபடியினால் அப்பகுதி மக்கள் பாதுகாப்புத் தேடிச் சென்றுள்ளனர்.

கரையோரப் பகுதி மீனவர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருபவர்கள் பல இலட்சம் பெறுமதியான உபகரணங்களை விட்டு தொழில் இழந்த நிலையில் பிற இடங்களில் தங்கியிருந்து அல்லற்படுகின்றனர். 75 வீதமான மீனவர்கள் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்களாவர். ஏனையோர் விவசாயத்தை மேற்கொண்டு வருபவர்கள்.

அத்துக் கரையோரப் பகுதிகளில் பெருந்தொகையான தென்னைகள் காய்ப்பதனால் பெரும் வருமானத்தை ஈட்டி வருகின்ற உரிமையாளர்களும் இதனை முற்றுமுழுதாக இழந்துள்ளனர். பல தொழிலாளர்கள் தெங்குத் தொழிலை இழந்திருக்கின்றனர். தற்போது தெங்குப் பொருள்கள் யாவும் இராணுவத்தினருக்கே முழு அளவில் பயன்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அலம்பில் - 5 ஆம் கட்டைப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினர் பதுங்குகுழி அமைத்து தங்களை பலப்படுத்துவதாகவும் முல்லைத்தீவு வாசிகளால் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரண்டாண்டுகளாக ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையையடுத்து கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறுப் பகுதிகளில் 500 இற்கு மேற்பட்ட சிங்கள மீனவக் குடும்பங்களை அரசாங்கம் இராணுவத்தினரின் உதவியுடன் குடியேற்றியும் வருகிறது.

இரண்டாண்டுகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கைகளினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாகினர். இன்று வரையில் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் கரையோரப்பகுதி உள்ளது என முல்லைத்தீவு செம்மலை வாசியொருவர் தெரிவித்தார். பல நூற்றுக்கணக்கான வீடுகள், வைத்தியசாலைகள், கடைகள், கட்டடங்கள் சேதமாகியுள்ளன. (07)

## மண்டைதீவு படையினர் சூடு

மண்டைதீவு, பூநகரி, கல்முனை போன்ற இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் ஒரே நேரத்தில் நேற்று காலை 6 30 மணியளவில் யாழ் கரையோர பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று அதிகாலை 2 மணியளவில் மீன்பிடி தொழிலுக்கு சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர்.

ஆனால் மீனவர்கள் எதுவித சேதமும் இன்றி கரைவந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 47

## ஷெல் தாக்குதல்

பலாலி முகாமிலிருந்து படையினர் கொல்லிப்பழை குடியிருப்புப் பகுதியை நோக்கி மாலை நேரப்பகுதிகளில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். 07

## தேசிய முன்னணி இடதுசாரி இணக்கம் காணவில்லை

இந்திய ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் நேற்று வரை தேசிய முன்னணியும் இடதுசாரிகளும் இணக்கம் காணவில்லை.

இது குறித்து நேற்று இரு கட்சித்தலைவர்களும் நடத்திய பேச்சின் முடிவைச் செய்தியாளர்களிடம் பேசிய வங்க முதல்வர் ஜோதிபாஸு இன்னமும் இரு தரப்பிடையேயும் வேறுபாடு இருப்பதாகவும் எனினும் பேச்சுகள் தொடரும் இறுதி முடிவு இன்று எடுக்கப்படும் எனவும் அவர் உறுதி தெரிவித்தார்.

## மக்கள் அஞ்சலி

நேற்று அதிகாலை 1-40 மணியளவில் கட்டுவன் பகுதியில் ஏற்பட்ட இராணுவத்தினரின் நேரடி மோதலின் போது வீரச்சாவை எய்திய வீரவேங்கை சோழனின் புகழுடம்பு நேற்று பிற்பகல் வேலையில் குருநகர் சனசமூக நிலைய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெரும் தொகையான மக்கள் மலர் தூவி தங்கள் இறுதி அஞ்சலியினைத் தெரிவித்துக் கொண்டனர். (07)

## ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர்?

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்திய ஜனாதிபதி தேர்தலில் சங்கர் தயாள் சர்மாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜி. ஜி. ஸ்வேல் என்பவர் உருவாகி வருவதாக பாரதிய ஜனதா கட்சி நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதி தெரிவில் பொதுக் கருத்து ஒன்று எட்டப்படுவதாக காங்கிரஸின் முயற்சி வெறும் பாசாங்கு செயலே எனவும் பாரதிய ஜனதா கட்சித்தலைவர்கள் தெரிவித்தனர்.

## மினிபஸ்கள் வேலை நிறுத்தம் கொழும்பில் தொடர்கிறது

கொழும்பில் கடந்த சில தினங்களாக மினிபஸ் உரிமையாளர் மேற்கொள்ளும் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

இவர்களை உடனடியாக கடமைக்கு வருமாறும் அவ்வாறு வராத மினிபஸ்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படும் என அரசு அறிவித்தும் வேலை நிறுத்தம் தொடர்கிறது.

சில மினிபஸ்கள் பாதை மாறிச்செல்வது அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுவது என்பன தொடர்பாக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்ததே இதற்கு காரணமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பத்திரிகையாளர் கட்டடம் மீது பங்களாதேஷ் பொலிஸ் சூடு

பங்களாதேஷில் நேற்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது பத்திரிகையாளர் சங்க கட்டடத்தினுள் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பத்திரிகையாளர்கள் காயமடைந்தனர்.

இதே சமயம் நேற்றைய வேலை நிறுத்தத்தில் இருகுழுக்கள் மோதிக்கொண்டதில் 16 பேர் கொல்லப்பட்டனர் 100 பேர் காயமடைந்தனர்.

## மானிப்பாய் அந்தோனியார் வருடாந்த திருநாள்

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருநாள் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் காலையில் கூட்டுத் திருப்பலி இடம் பெற்றது.

பூசை முடிவில் புனித அந்தோனியார் திருச்சொரூபப் பவனி ஆலய முன்றலில் இடம் பெற்றது.

வழமையை விட பெருந்திரளான பக்தர்கள் இம்முறை கலந்து கொண்டதைக் காண முடிந்தது.

தமிழீழ காவல்துறையினரும் தொண்டர்களும் ஜனத்திரளைக் கட்டுப் படுத்துவதில் பணிபுரிந்தனர். 47

## தெரிவுக்குழுவின்...

வின் புதிய திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்க் குழுத் தலைவர் ஒருவர் தேசிய இனங்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட்டு வரும் இன்றைய உலக முறைமையில் இங்கு மட்டும் தமிழர்க்கு எவ்வளவு குறைந்த உரிமை வழங்கலாம் என ஆராயப்படுகிறது எனக் கண்டனம் தெரிவித்தார்.

## இஸ்ரேல்...

வில் ஏற்பட்ட வெடிவிபத்தில் தொழிற்சாலை தகர்ந்ததுடன் பல தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை லிபியாவில் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் 17 பேர் பலியாகினர் 200 பேர் காயமடைந்தனர்.

## எண்ணாயிரம்...

தீவில் உள்ள 12000 மக்களில் 687 பேரும், நயினாதீவில் உள்ள 5 17 மக்களில் 3217 பேரும், அனலைதீவில் உள்ள 3905 மக்களில் 3263 பேரும் மண்டைதீவில் உள்ள 3000 மக்களில் 40 பேரும், எழுவைதீவில் உள்ள 575 மக்களில் 43 பேரும் இராணுவத்தினரிடம் அகப்பட்டுள்ளனர்.

ஏனைய இடங்களான அல்லைப்பிட்டி, செருக்கன், வேலணை, சரவணை மக்கள் முழுமையாக வெளியேறிவிட்டனர்.

தீவுப்பகுதியில் ஏராளமான காணி நிலங்களில் இவ்வருடத்திற்கான நெற்செய்கை மிளகாய், வெங்காயம், புகையிலைச் செய்கைகளையும் இழந்துள்ளன. 07

## ● யுத்தத்துக்கு செல்ல மறுத்த ராணுவ மேஜரின் வழக்கை ஏற்க நீதிமன்றம் மறுப்பு

யுத்தத்தில் ஈடுபட முடியாது என இராணுவ மேஜர் ஜயசுந்தர உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை நிராகரித்துள்ளது என சிங்கள பி. பி. ஸி தெரிவித்தது.

இந்த மேஜரை யுத்த முனைக்குச் செல்லுமாறு இராணுவ தலைமைப்பீடம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து இவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இவரது வழக்கை ஏற்றுக் கொள்ளமுடியாது என உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

## ● ஜனாதிபதி வேண்டுகிறார் செக்கோஸ்லவேக்கியா பிரிய கருத்து வாக்கெடுப்பு

செக்கோஸ்லவேக்கியா இரு நாடுகளாகப் பிரிவதற்கு முன் நாடு முழுவதும் பொது மக்கள் கருத்துக் கணிப்பு நடைபெற வேண்டும் என செக்கோஸ்லவேக்கிய ஜனாதிபதி கேட்டுள்ளார்.

செக்கோஸ்லவேக்கிய வானொலியில் உரையாற்றிய அவர் நாட்டைப் பிரிப்பதற்கு முன் எடுக்க வேண்டிய நடவடிக்கை இது தான் என்றார்.

செக்கோஸ்லவேக்கியாவை செக் நாடு என்றும் ஸ்லோவாக் நாடு எனவும் தனித் தனியாகப் பிரிப்பதென இரு குடியரசுகளின் கட்சிகளும் எடுத்த முடிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது எனவும் அவர் கூறினார்.

## ● வவுனியா கொழும்பு இரவு ரயில் பயணத்துக்கு அனுமதிக்க நடவடிக்கை

வவுனியாவில் இருந்து இரவு புறப்படும் ரயிலில் வடபகுதி பயணிகள் பயணம் செய்ய வகை செய்யும் முகமாக தாண்டிக்குளம் தடை முகாமை மாலை வரை திறந்திருக்க நடவடிக்கை எடுக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திறக்கப்பட்டால் வடக்கில் இருந்து காலையில் புறப்பட்டு அன்றைய தினம் மாலையில் ரயிலில் கொழும்புக்கு பயணம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது காலை 5 மணி முதல் பகல் 12 மணிவரையுமே தாண்டிக்குளம் தடை ஊடாகச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. 47

## நடமாட்டம் குறைவு

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயப்பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்படுகிறது.

படையினர் அடிக்கடி ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொள்வதால் இங்கு மக்கள் நடமாட அச்சம் தெரிவிக்கின்றனர். 47

## குழந்தைகளுக்கான உணவு முத்திரை

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வறுமை நிவாரண முத்திரை பெறுவோரில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

கிராம சேவையாளர் ஊடாக இந்த முத்திரைகள் யாழ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகிறது. 47

## 10 இடங்களில் சோதனை

வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு தினமும் காலை 8 மணிக்கு பஸ்சேவை நடாத்தப்படுகிறது.

திருகோணமலைக்கு செல்வதற்கு இடையில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைகள் நடைபெறுகிறது. 47

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டடத்தில் உள்ள அச்சகத்தில் 22-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது